**சார்பு நீதிமன்றம், அவிநாசி**

**O.S.No. 51/2022**

**21.11.2022**

**வா.சா.1 –அருக்காத்தாள்**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வாதியான எனது கணவரும், பிரதிவாதியின் தகப்பனார் பழனிச்சாமியும் உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். 03.06.1969 தேதியில் எனது கணவரும், பழனிச்சாமியும் கூட்டாக கிரையம் பெற்ற சொத்துக்கள் என்றால் சரிதான். சொத்துக்களை பொறுத்து, அவிநாசி உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வா.எண்.333/97 எண்ணில் பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்த வழக்கில் IA No.518/2008-ல் இறுதிநிலை தீர்ப்பானை மனு நிலுவையில் இருந்த சமயத்தில், மேற்படி பழனிச்சாமி காலமாகி விட்டதால், அவரது வாரிசுகள்தரப்பினராக சேர்க்கப்பட்டு இறுதிநிலை தீர்ப்பானை பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி தீர்ப்பானையில், A schedule சொத்து பழனிச்சாமி வகையறாவுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். B Schedule சொத்து எங்களுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அதன்படிதான் சொத்துக்களை அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். பிரதிவாதிகள் 10.11.2021-தேதியிலோ அல்லது வேறு எந்த தேதியிலோ எங்கள் ஸ்வாதீனத்திற்கு இடையூறு செய்யவில்லை என்றால் சரியல்ல. எங்கள் சொத்து பாத்தியத்தை பிரதிவாதிகள் மறுக்கவில்லை என்றால் சரியல்ல. அதனால் அவர்கள் செலவுத்தொகை கொடுக்க வேண்டியதில்லை என்றால் சரியல்ல.

*Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.*

Sd./- K. Suresh Kumar
Subordinate Judge,
Avinashi.